23.07.2025.

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண்.35/2025</u>

அ.சா. 7

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரஹ்மத்துல்லா | | |
| த/பெ | பக்ரூதின் | | |
| கிராமம் | ஜானகிபுரம் | தொழில் | மெடிக்கல் ரெப் |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 28/2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 23.07.2025 |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது மெடிக்கல் ரெப்ரசன்டேடிவ் ஆக வேலை செய்து வருகிறேன். சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு ஒருநாள் மதியம் 1-30 மணியளவில் ஜானகிபுரம் ரவுண்டானா அருகில், கமாலுதீன் மற்றும் சதாம் உசேன் ஆகியோர்களை தாக்கிய வழக்கில் எதிரிகள் வீரப்பன், சரவணன் ஆகியவர்களை வைத்து விசாரணை செய்தார்கள். அவர் அடித்ததை ஒப்புக்கொண்டார். அதை போலீசார் பதிவு செய்து கொண்டார்கள். அதில் என்னிடமும், என் மைத்துனர் அப்துல் சமது என்பவரிடமும் கையெழுத்து பெற்றார்கள். அப்போது சரவணன் கத்தியை ஆஜர் செய்தார். அதை கைப்பற்றிக்

கொண்டார்கள். அந்த கைப்பற்றுதல் மகசரில் என்னிடமும் எனது மைத்துனரிடமும் கையெழுத்து பெற்றார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.6 ஆகும். கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.7 ஆகும். அந்த கத்தியை பார்த்தால் என்னால் அடையாளம் கூற முடியாது. இது சம்பந்தமாக என்னை காவல்துறையினர் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் எம்.பி.ஏ வரை படித்துள்ளேன். மெடிக்கல் ரெப்ரஷன்டேட்டிவாக இருக்கிறேன் என்றால் சரிதான். நான் மெடிக்கல் ரெப்ரசன்டேட்டிவாக ஏஜென்சி மூலம் வேலை செய்து வருகிறேன். எங்களது பணியில் நாங்கள் காலையில் கம்பெனிக்கு சென்றால் எப்போது சென்று எப்போது திரும்பி வருவோம் என்றால், காலை 9 மணிக்கு சென்றால் சாயங்காலம் 6 மணிக்கு திரும்பி வருவோம். இதுதான் எனது நிரந்தர பணி என்றால் சரிதான். என்னை காவல்துறையினர் சம்பவம் நடந்த மறுநாள் விசாரணை செய்தார்கள். என்னை போலீசார் பெட்ரோல் பங்க் அருகில் ரவுண்டானா பக்கத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். அந்த பெட்ரோல் பங்கில் வேலை செய்யும் ஊழியர்கள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். அந்த இடம் பொதுமக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். அங்கு தெற்கிலும், வடக்கிலும், வாகனங்கள் சென்று வருகிறது என்றால் சரிதான். இந்த வழக்கில் யார் புகார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. என்று புகார் கொடுத்தார்கள் என்று எனக்குத் தெரியும். புகார் கொடுத்த கமாலூதீன் எனது மைத்துனர் ஆவார். அந்த சமயம் நானும் அந்த விசேஷத்தில் இருந்தேன். இந்த விஷயங்களை நான் என்னை காவல்துறையினர் விசாரணை செய்தபோது சொன்னேனா? என்றால் சொன்னேன். கமாலுதீனின் சித்தி பெயர் அபிபுன்னிஷா. அவர் எனக்கு அத்தை முறையாக வேண்டும். நான் எத்தனை மணிக்கு விசேஷத்திற்கு சென்றேன் என்றும், எத்தனை மணிக்கு திரும்பி வந்தேன் என்றும், காவல்துறையினர் என்னை விசாரணை செய்தபோது சொன்னேனா? என்றால் இல்லை. நான் ஜானகிபுரத்தில் சுமார் 28 வருடமாக வசித்து வருகிறேன். நான் அந்த ஊரில் உள்ள அனைத்து தரப்பு மக்களிடமும் பழகுவேன்

என்றால் சரிதான். அப்துல் சமத் எனது மைத்துனர் ஆவார். என்னுடன் கையெழுத்து போட்டவர் என்ன படித்துள்ளார் என்று எனக்கு தெரியாது. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் கையெழுத்து போடவில்லை என்றும், சரவணன் என்பவர் காவல்துறையில் வாக்குமூலம் அளித்த விவரம் எனக்கு தெரியாது என்றும் சொன்னால் சரிதான். நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை